சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 33 தரம் - 12

## Covid – 19 இடர் வீடுமுறைகால பயிற்சி

## தேர்ச்சி – 4.10 : கட்டுப்பாட்டுக் கணக்குகள்

வாரம் - **August 09 – 13**
**இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி**

**தயாரிப்பு : சஜித்.sp**
**BBA(Financial Spl), University of Colombo**

**1.** முன்சிபா நிறுவனத்தின் 2021 மார்ச் மாதத்திற்கான தரவுகள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| விற்பனை நாட்குறிப்பின் மொத்தம் | 500 000 |
| உட்திரும்பல் நாட்குறிப்பின் மொத்தம் | 60 000 |
| அனுமதித்த கழிவு | 20 000 |
| பதிவழித்த மதிப்புக் குறைப்பு நட்டம் | 30 000 |
| வியாபார வருமதிகள் மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு | 80 000 |

2021 மார்ச் மாதத்திற்கு வியாபார வருமதிகளிடம் பெற்றுக்கொண்ட பணம் யாது?
1. ரூபா 390 000 2. ரூபா 310 000 3. ரூபா 470 000
4. ரூபா 350 000 5. ரூபா 370 000

**2.** கார்த்திகா நிறுவனத்தின் 2021 டிசம்பர் மாதத்திற்கான தரவுகள் பின்வருமாறு:

| | ரூபா "000" |
|---|---|
| மொத்த விற்பனைகள் | 1 100 |
| காசு விற்பனைகளின் மொத்தம் | 400 |
| விற்பனைதிரும்பல் நாட்குறிப்பின் மொத்தம் | 100 |
| கொடுத்த கழிவு | 25 |
| எதீரீடு செய்த தொகை | 35 |
| விதித்த வட்டி | 10 |
| வியாபார வருமதிகள் மீதியில் ஏற்பட்ட குறைவு | 50 |

2021 டிசம்பர் மாதத்திற்கு வியாபார வருமதிகளிடம் பெற்றுக்கொண்ட பணம் யாது?
1. ரூபா 700 000 2. ரூபா 625 000 3. ரூபா 580 000
4. ரூபா 480 000 5. ரூபா 600 000

**3.** சில்லறை வியாபார வணிமொன்றின் குறித்த ஓர் காலப்பகுதிக்கான கடன் விற்பனை ரூபா 500 000 ஆகும். விற்பனை திரும்பல், விற்பனையில் 10% ஆகும். கடன்பட்டோரிடம் பெற்றுக்கொண்ட காசோலைகள் ரூபா 405 000 ஆகும். பதிவழித்த அறவிடமுடியாக்கடன் ரூபா 30 000 ஆகும். கடன்பட்டோரில் கிடைத்த காசோலைகளில் மதிப்பிழந்தவை ரூபா 40 000 ஆகும். கடன்பட்டோர் மீதியின் மீது விதித்த தண்ட வட்டி ரூபா 20 000 ஆகும். கால முடிவில் கடன்பட்டோர் மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 60 000 ஆகும். எனின், கடன்பட்டோருக்கு வழங்கிய கழிவுகளின் மொத்தம் யாது?
1. ரூபா 5 000 2. ரூபா 10 000 3. ரூபா 15 000
4. ரூபா 20 000 5. ரூபா 25 000